**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2021**

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 06 வீதிகளின் 131.50 கிலோமீற்றர் பிரிவுகளினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஒகஸ்ட் 05 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. இருப்பினும்இ செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 ஏப்ரல் 09 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நாவுல நகரம் உள்ளடங்களாக கண்டி - யாழ்ப்பாணம் வீதிப்பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் 2021 சனவரி 30 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட அவைகள் நடைமுறை வேலையிலிருந்து பூர்த்தியாக்கப்பட்ட வேலைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | 566.03 | 2022 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களின் மிகுதி நடைமுறை வேலைகளை சிவில் வேலைகளிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | வீதி கிரயங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொதுதிறைசேறியினால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் என்பனவற்றின் பிரகாரம்இ கடன் வழங்கள்களிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொத்த செலவினங்கள் ரூபா 480 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தொகை வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளில் ரூபா 201 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 83 மில்லியனான ஒரு தொகை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடனின் கீழ் பதிவுசெய்வதற்கு பதிலாக மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டிருந்தது. எனவே கடன் வழங்கள்களின் பயன்படுத்தல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் முறையாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 279 | 2022 ஆம் ஆண்டிலிருந்து ஈஆர்டி இன் அறிக்கை மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கை என்பனவற்றை இணக்கம் செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டியதுடன் வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம்இ 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1இ280 காணித்துண்டுகளிற்கான தாமத வட்டி மற்றும் 1இ124 காணித்துண்டுகளிற்கான இழப்பீடு என்பன காணி சுவீகரிப்பு மீதான ஓர் ஏற்பாட்டினை செய்ய அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - | உடன்பட்டனர். 2022 ஆம் ஆண்டில் வட்டி கொடுப்பனவுகளிற்காக போதியளவு ஏற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

3 பௌதீக செயலாற்றல்

3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வீதிகளின் புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல். | நாவுல நகரம் உள்ளடங்களாக கண்டி-யாழ்ப்பாணம் வீதிப்பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் கையேற்பு பத்திரத்தின் பிரகாரம் 2020 திசெம்பர் 04 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இருப்பினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட காணி சுவிகரிப்பிற்கான இழப்பீடு எவ்வித காணித்துண்டுகளிற்கும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பாலங்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல். | i. ஒருகொடவத்த – அம்பத்தல மீதுள்ள பால இல 6/2 இன் அகலப்படுத்தலின் நிர்மான வேலைகள் 2020 சனவரி 13 இல் ஆரம்பிக்கப்பட்டு 2021 மார்ச் 13 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 53 சதவீத செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. உண்மையான பூர்த்தியாக்கல் திகதி காலாவதியாகி காலநீடிப்பு ஒப்பந்ததாரரினால் கோரப்படாதிருந்தும் செயற்திட்டமானது ஒப்பந்தபொது நிபந்தனையின் பிரகாரம் தாமத கட்டணங்களை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்பட்டனர். | மிகுதி புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்தவும் கிரயங்களினை குறைக்க கிரய நிபந்தனைகளுடன் இணங்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | | ii. ஒரு கொடவத்த – அம்பத்தல மீதுள்ள பால இல 6/1 இன் அகலப்படுத்தலின் நிர்மான வேலைகள் 2019 செப்டம்பர் 07 இல் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசம்பர் 07 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. பாலமானது கையளிப்பு பத்திரத்தின் பிரகாரம் 2021 திசெம்பர் 15 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 96.4 சதவீத பௌதீக செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 10.1 இற்கு முரனாக அனைத்து மேற்பரப்பிடல் வேலைகள்இ இன்டர்லாக் மற்றும் | உடன்பட்டனர். நீர்வழங்கள் சபையுடன் தொடர்புபட்ட தீர்க்கப்படாத விடயங்கள் காரணமாக செயற்திட்ட பணிப்பாளர் காலநீடிப்புடன் தொடர்புபட்ட இழப்பீடுகளை குறைக்க பாலத்தினை கையேற்க தீர்மானித்திருந்தார். | வீதி.'.பாலத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பொதுபயன்பாடு ஏற்பாடுகளினையும் தீர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடைபாதை வேலைகள்இ பாலத்தின் அடிப்பாகத்தில் துண்களை பொருத்துதல்இ வீதியில் ஒளியூட்டல் போன்ற பிரதானமான நிலுவை வேலைகள் பாலத்தினை கையளிக்கும் நேரத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கலிற்கான வேலை நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்காக காணப்பட்டிருக்கவில்லை. | | |
| iii. ஒரு கொடவத்த – அம்பத்தல மீதுள்ள பால இல 4/3 இன் அகலப்படுத்தலின் நிர்மான வேலைகள் 2019 செப்டம்பர் 07 இல் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசம்பர் 07 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. பாலமானது கையளிப்பு பத்திரத்தின் பிரகாரம் 2021 ஒக்டோபர் 26 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 99.8 சதவீத பௌதீக செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 10.1 இற்கு முரனாக அனைத்து மை பூசுதல் வேலைகள்இ கேபியன் சுவர் நிர்மானம்இ சுத்தப்படுத்தல் மற்றும் பாலத்தின் பின்பகுதி சுவரினை திருத்தம் செய்தல் மற்றும் நடைபாதை நிர்மானம் போன்ற பிரதானமான நிலுவை வேலைகள் பாலத்தினை கையளிக்கும் நேரத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கலிற்கான வேலை நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்காக காணப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். நீர்வழங்கள் சபையுடன் தொடர்புபட்ட தீர்க்கப்படாத விடயங்கள் காரணமாக செயற்திட்ட பணிப்பாளர் காலநீடிப்புடன் தொடர்புபட்ட இழப்பீடுகளை குறைக்க பாலத்தினை கையேற்க தீர்மானித்திருந்தார். | வீதி.˙.பாலத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பொதுபயன்பாடு ஏற்பாடுகளினையும் தீர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீது ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 2.79 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயறலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற 04 ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கூறிய விடயத்திற்கு பின்னால் உள்ள காரணமானதுஇ ஒப்பந்ததாரர் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை தனியாக பெற்றுக்கொள்ள அனுமதிக்காவிட்டால் அசாதாரணமாக உயர்ந்த விகிதத்தினை உடைய விகிதத்தில் உள்ளடக்க அவரிற்கு வாய்ப்பு உள்ளதுடன் ஒப்பந்தத்தின் மொத்த கிரயம் அதிகரிக்க கூடும். | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு விலைமனு ஆவணங்களை வழங்க முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பவற்றினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி சுவீகரிப்பு செயன்முறைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும்இ காணி சுவீகரிப்பு செயன்முறையானது இன்னும் நடைமுறையிலே உள்ளது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 238 காணித்துண்டுகளிற்காக ரூபா 153.7 மில்லியன் தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 82 காணித்துண்டுகளிற்காக ரூபா 15.05 மில்லியன் தாமத வட்டியாகவும் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் எவ்வித காணித்துண்டுகளையும் பதிவு செய்திருக்கவில்லை. | உடன்பட்டனர். | அதன்மீதான மேலதிக கிரயங்களை தவிர்க்க இழப்பீடுகளை கொடுத்து தீர்க்கவும் காணி சுவீகரிப்பு செயன்முறையை துரிதப்படுத்தவும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |